*கவனிக்க.- 17.08.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி II ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1773 - 2012 අගෝස්තු මස 24 වැනි සිකුරාදා - 2012.08.24**

*1773 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 118 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


*கவனிக்க.- இவ்வர்த்தமானியின் பகுதி V இல் 2008 ஆம் ஆண்டின் காலாண்டிற்கான (ஒற்றோபர் - திசெம்பர்) புத்தகப் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, ஓகத்து மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு யுன் மாதம் 23 ஆந் திகதி.

# நானாவித அறிவித்தல்கள்

## இலங்கை மரபுரிமைகள் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

ஜானக பிரியந்த பண்டார, பா. உ. ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை இலக்கம் 48 (1) இன் கீழ் ''இலங்கை மரபுரிமைகள் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' என்றழைக்கப்படுகின்ற சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தேசித்துள்ளதை இத்தால் அறியத்தருகின்றேன்.

சட்டமூலத்தின் நோக்கமாக விளங்குவது பின்வரும் பொதுக் குறிக்கோள்களை உள்ளடக்கிய மேற்குறிப்பிட்டுள்ள மன்றத்தைக் கூட்டிணைப்பதேயாகும் :-

(1) இலங்கையின் தேசிய மரபுரிமைகள் பற்றிய அறிவை நாட்டிற்குள்ளும் உலகளாவிய மட்டத்திலும் விஸ்தரித்து அதற்கு முறையான சர்வதேச அந்தஸ்தை பெற்றுக் கொடுத்தல் மற்றும் தற்போது அதற்குத் தடையாக உள்ள கட்டுப்பாடுகளை நீக்குதல் அத்துடன் அம்மரபுரிமைகளின் பெறுமதியை இந்நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு தகுந்தவாறு அதற்கு மட்டுப்படுத்தப்பட்ட வகையில் பயன்படுத்தல் ;

(2) ஆராய்ச்சிகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் மூலமாக இலங்கையின் தேசிய மரபுரிமைகளின் பெறுமானத்தை இனங்கண்டு அவற்றை மென்மேலும் அபிவிருத்தி செய்வதும் பாதுகாத்துக் கொள்வதும் ;

(3) இளைய சந்ததியினரின் தேசிய மரபுரிமைகள் பற்றிய உணர்வை உறுதி செய்வதற்காக பாடசாலை மாணவர்கள் மத்தியில் அவ் அறிவினை வளர்த்தல்.

ஆகியனவாகும்.

ஜானக பிரியந்த பண்டார,
பாராளுமன்ற உறுப்பினர்,
கொழும்பு மாவட்டம்.

8-570

## அறநெறிப்பாடசாலை ஆசிரியர் நிதியம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

ஜானக பிரியந்த பண்டாரபா.உ/ ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 48 (1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின்கீழ் ''அறநெறிப்பாடசாலை ஆசிரியர் நிதியத்தை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த அறநெறிப்பாடசாலை ஆசிரியர் நிதியத்தை கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(1) அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களது அறநெறி அறிவு, திறமை மற்றும் ஆற்றல்களை விருத்தி செய்வதில் முறையான பயிற்சி வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல் மற்றும் அதற்கு உதவுதல், முறையான ஆசிரியர் பயிற்சி நிலையமொன்றினை நடாத்திச் செல்லல் ;

(2) அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் உயர்கல்விக்கான வழிகாட்டல்கள், புலமைப்பரிசில்கள் மற்றும் உதவிகளை வழங்குதல் ;

(3) அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களின் ஆசிரியத் தொழிலுக்கு தேவையானவைகளையும் நலன்புரிகளையும் உயர்த்து வதற்கான வேலைத்திட்டங்களை செயற்படுத்தல் ;

பிறவும்.

ஜானக பிரியந்த பண்டார,
பாராளுமன்ற உறுப்பினர்.

8-573

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.